பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

12 09 2026 SATURDAY 6 45 AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவின் காலத்தால் அழியாத ஞானமும், வளமான பாரம்பரியமும், நாடுகளின் எல்லைகளையும் கடந்து செல்வது மகிழ்ச்சி அளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

- காவிரி நீர் கடைமடை பகுதிகளுக்குச் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

- வடக்கிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில், சென்னையில் கால்வாய்களை தூர்வாரும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

- ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<

இந்தியாவின் காலத்தால் அழியாத ஞானமும், வளமான பாரம்பரியமும், பல்வேறு மொழிகளையும், நாடுகளின் எல்லைகளையும் கடந்து செல்வது மகிழ்ச்சி அளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க புதுதில்லி வந்துள்ள ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுக்கு திருக்குறளின் ரஷ்ய மொழிபெயர்ப்பு பிரதியை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வழங்கியதை குறிப்பிட்டு, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நீடித்த நாகரிக பாரம்பரியத்தை அழகாக எடுத்துக்காட்டும் நிகழ்வாக இது அமைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

திருவள்ளுவரின் உலகளாவிய ஞானம், மொழி, கலாச்சாரம், எல்லைகளை கடந்து இன்றும் பயணித்து வருவதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி, நேற்று புதுதில்லியில் ஐ.நா பொதுச்செயலாளர் திரு. António Guterres-ஐ சந்தித்துப் பேசினார்.

பிரிக்ஸ் அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா நான்காவது முறையாக ஏற்றுள்ளதற்காக, பிரதமருக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் வாழ்த்து தெரிவித்தார்.

தற்போதைய உலக சூழலுக்கேற்ப ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

சர்வதேச அளவில் நிகழ்ந்து வரும் மோதல்கள் மற்றும் தடையற்ற கப்பல் போக்குவரத்து, நிலையான வளர்ச்சி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில்

ஏற்பட்டுள்ள முன்னேற்றம், உணவுப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

>>>>>>><<<<<<

காவிரி நீர் கடைமடை பகுதிகளுக்குச் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - கே.ஏ. செங்கோட்டையன் 58 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

வடக்கிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில், சென்னையில் கால்வாய்களை தூர்வாரும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி கூறியுள்ளார்.

அம்பத்தூர், அண்ணாநகர் மற்றும் தேனாம்பேட்டை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், மின்சார வாரியம், மெட்ரோ ரயில் நிறுவனம் உள்ளிட்ட பல்வெறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால்

கட்டுமானம், தூர்வாருதல், சாலைகள் சீரமைப்பு உள்ளிட்ட பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம், அம்பத்தூர் சிட்கோ உள்ளிட்ட பகுதிகளில் கால்வாய்களின் தடுப்புச் சுவர்களை உயர்த்திக் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், இப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. விஜய் பாலாஜி கூறினார்.

>>>>>>><<<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஊடகத்தினர் பயன்படுத்திக் கொண்டு, தங்களது பணித்திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பத்திரிகை தகவல் அலுவலக தென்மண்டல தலைமை இயக்குநர் திரு. வி. பழனிசாமி கூறியுள்ளார்.

சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தின் சார்பில், திண்டுக்கல்லில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படும் செய்தியாளர்கள், மத்திய மாநில அரசுகளின் மக்கள் நலத்திட்டங்களை தெளிவாக அறிந்திருக்க வேண்டும் என்று கூறினார்.

மாறிவரும் நவீன உலகில் உண்மைச் செய்திகளை அடையாளம் கண்டும், போலிச் செய்திகளை தவிர்த்தும் சரியான செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் ஊடகத்தினர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு.வி. பழனிசாமி கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<

கோவில் பிரசாதங்களின் தரத்தை உறுதி செய்ய ஆவின் நெய் மற்றும் கூட்டுறவு அங்காடிகளின் பொருட்களை பயன்படுத்த வேண்டும் என்று இந்துசமய அறநிலையத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

பிரசாத பாக்கெட்டுகளில் கோவில் முகவரி, பொருட்களின் தரம், எடை, விலை, தயாரிப்பு தேதி உள்ளிட்டவற்றை குறிப்பிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரசாத பொருட்களுக்கும் தயாரிப்புச் செலவு மற்றும் விற்பனைக்கான விலையும் அரசே நிர்ணயித்துள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>>><<<<<<

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழா இம்மாதம் 17ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அதில் பொதுமக்கள் பங்கேற்க வசதியாக, சென்னையிலிருந்து மதுரைக்கு மூன்று சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சென்னை சென்ட்ரலிலிருந்து மதுரைக்கு வரும் 16ஆம் தேதி மாலை மணி 4.10-க்கும், மறுமார்க்கத்தில் மதுரையிலிருந்து சென்னை சென்ட்ரல் நிலையத்திற்கு 17ஆம் தேதி மாலை மணி 3.30-க்கும் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

தாம்பரத்திலிருந்து மதுரைக்கு வரும் 16ஆம் தேதி இரவு மணி 9.40-க்கும், சென்னை கடற்கரையிலிருந்து செப்டம்பர் 16ஆம் தேதி காலை 10.45 மணிக்கு மதுரை வழியாக மானாமதுரைக்கும் முன்பதிவில்லா சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>>><<<<<<

மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கடலோர மாவட்டங்கள், மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், திருச்சி, நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் லேசான மழை பெய்யும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

கலாச்சாரம், வர்த்தகம், அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவுடன் இணைந்து செயல்பட ஈரான் ஆர்வமுடன் இருப்பதாக அந்நாட்டு அதிபர் திரு. Masoud Pezeskian தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

குறைந்த செலவில் மருத்துவ சாதனங்கள் கிடைக்கும் வகையில், ஒத்துழைத்து செயல்பட தென்கிழக்கு ஆசிய நாடுகள் முடிவு செய்துள்ளன.

>>>>>>><<<<<<

இந்தியா - அமெரிக்கா இடையேயான நட்புறவு இருநாடுகளுக்கும் பயனளிக்கும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

உத்ராகண்ட் மாநிலத்தின் ஆன்மிக தலமான கேதர்நாத் - பத்ரிநாத் இடையிலான சாலையை இணைக்கும் வகையில், ருத்ரபிரயாக் மாவட்டத்தில் புதிய பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

விமானத்தில் மும்பைக்கு கடத்தி வரப்பட்ட, 5 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பிலான சுமார் மூன்றரை கிலோ தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

>>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூரில் மகளிர் சுயஉதவி குழுக்களை சேர்ந்தவர்களுக்கு பல்வேறு கடனுதவிகளை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. காந்திராஜ் நேற்று வழங்கினார்.

>>>>>>><<<<<<

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் நடத்தவுள்ள வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட இளைஞர்கள் பங்கேற்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>>><<<<<<

தேனி மாவட்டம், உத்தமபாளையத்தில் வரும் 16 மற்றும் 17 தேதிகளில் உங்களைத் தேடி- உங்கள் ஊரில் திட்ட சிறப்பு முகாம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திரு. வைத்திநாதன் அறிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

மதுரையின் பழமையான சென்ட்ரல் திரையரங்கில் நேற்றிரவு தீ விபத்து நேரிட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புத்துறையினர் தீயை அணைத்தனர்.

>>>>>>><<<<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகேயுள்ள நெடுவாக்கோட்டை நாட்டலங்கார மேல மாரியம்மன் கோவில் முளைப்பாரி திருவிழா வெகுவிமரிசையான நடைபெற்றது.

>>>>>>><<<<<<

சென்னையில் தொடர்ந்து குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த 152 பேரை மாநகர காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்தி

ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, சீனாவின் Moqi-யில் காலை மணி 9.45-க்கு தொடங்குகிறது.

நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு அரையிறுதிப் போட்டியில் சீனா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

>>>>>>END<<<<<<